**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை

**E.A.No.08/2026**

**in**

**E.P.No.03/2016 in O.S.No.477/2013**

கணேசன் ....மனுதாரர்/5 ம் பிரதிவாதி

/எதிர்/

1. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை ( பதிவு எண்.3/2013)
அதன் தலைவர் பெ.சுப்பையா பிள்ளை (இறப்பு)
மற்றும் செயலாளர்
பா.முருகன் அவர்கள் மூலம் ....எதிர்மனுதாரர்/வாதி

2. கணபதியாபிள்ளை (இறப்பு)
3. சுப்புலட்சுமி
4. பாலசுப்பிரணியன்
5. ரவிச்சந்திரன்
6. சீதாலட்சுமி
7. மாதவன் (மூளை வளர்ச்சியற்றவர்)
(7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக
கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.காளிராஜ் மூலம்)

....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 13.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 17:50:48 +0530

தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.காளிராஜ் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1(a)–ன் கீழ், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை நிறைவேற்றுதல் மனுவில் ஏற்றுக்கொள்ளக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இவ்வழக்கில் கட்டாய விசாரணையின்போது இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்ய தவறிவிட்டது என்றும், மேற்படி ஆதரவுகள் தற்போதுதான் கிடைத்துள்ளது என்றும், மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக் கொள்ள உத்தரவாக வேண்டியுள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடியதாக உள்ளது என்றும், ஆகையால் இவ்வழக்கின் கட்டாய விசாரணையின்போது இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்யாத தவறுதலையும் காலதாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கில் பிரதிவாதியான கணபதியா பிள்ளை என்பவர் மீது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 17:50:56 +0530

16.07.2015 தேதியில் ஒருதலைபட்சமாக தீர்ப்பாகியுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பினை அனுசரித்து நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பினை மாற்றுவதற்கு மனுதாரர் யாதொரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இந்த நிறைவேறுதல் மனுவில் மேற்படி தீர்ப்பிற்கு மாறுபட்டோ, தீர்ப்பினை பின்னோக்கி தள்ளுவதற்கோ, சட்டப்படி இயலாது என்றும், இந்த மனுதாரர், எதிர்மனுதாரர்களின் அமைப்பிற்கு எதிரான நபர்களின் துர்போதனையின் பேரில் இம்மனுவில் கட்சி செய்து வருகிறார் என்றும், மனுதாரர் ரிசிவ் செய்து கொள்ளக்கோரும் ஆவணத்திற்கும், இந்த தீர்ப்பிற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே இதன் மனுவில் கண்ட ஆவணங்களை இந்நீதிமன்றம் அங்கிகரீக்கக்கூடியதில்லை என்றும், மனுதாரர் சட்டத்திற்கு பொருந்தாத சங்கதிகளை கூறி கட்சி செய்து, அதன் மூலம் ஏதேனும் ஆதாயம் பெற்றுவிடலாம் என இந்த தீர்ப்புக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என்றும், மனுதாரர் ஆவணங்களை ரிசிவ் செய்து கொள்ள பிரஸ்தாபிக்கும் மு.வ.எண்.476/2022 மற்றும் மு.வ.எண்.478/2022 வழக்குகளின் 23.12.2022 தேதிய தீர்ப்பின் மீது சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள், உரிய மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த வழக்கின் விசாரணை நீதிமன்ற தீர்ப்பினை இவ்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பின்படி எதிர்மனுதாரர்கள் உரிய சட்டப்பலனை அடைந்து கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்றும், இந்த தீர்ப்பின்படி எதிர்மனுதாரர்கள் தீர்ப்பின் பலனை அடைந்துகொள்ள பொருத்தமானவர்கள் ஆவார்கள் என்றும், இந்த வழக்கில் மனுதாரரின் தகப்பனார் ஒருதலைபட்சமாக இருந்து வந்துள்ள நிலையில், அவரின் வாரிசான மனுதாரர் E.P.No.3/2026 மனுவில் இவ்வழக்கின் தீர்ப்புக்கு எதிராக கட்சி செய்ய சட்டப்படி இயலாது என்றும், மனுதாரர் இந்நிறைவேறுதல் நடவடிக்கையை காலம்கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்து தப்பு கட்சி செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 17:51:03 +0530

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை, வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) நிறைவேற்றுதல் மனுவானது 5ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது E.P.No.03/2016 மனுவானது 5 வது எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. மேற்படி ஆவணங்களை விரைந்து தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

7) மேலும், இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் ரிசிவ் செய்து கொள்ளக்கோரும் ஆவணத்திற்கும், இந்த தீர்ப்பிற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்றும், மனுதாரர் ஆவணங்களை ரிசிவ் செய்து கொள்ள பிரஸ்தாபிக்கும் மு.வ.எண்.476/2022 மற்றும் மு.வ.எண்.478/2022 வழக்குகளின் 23.12.2022 தேதிய தீர்ப்பின் மீது சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள், உரிய மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த வழக்கின் விசாரணை நீதிமன்ற தீர்ப்பினை இவ்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பின்படி எதிர்மனுதாரர்கள் உரிய சட்டப்பலனை அடைந்து கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்றும், இந்த வழக்கில் மனுதாரரின் தகப்பனார் ஒருதலைபட்சமாக இருந்து வந்துள்ள

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 17:51:10 +0530

நிலையில், அவரின் வாரிசான மனுதாரர் E.P.No.3/2026 மனுவில் இவ்வழக்கின் தீர்ப்புக்கு எதிராக கட்சி செய்ய சட்டப்படி இயலாது என்றும், மனுதாரர் இந்நிறைவேறுதல் நடவடிக்கையை காலம்கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்து தப்பு கட்சி செய்து வருகிறார் என இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) இருப்பினும், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் E.P.No.03/2016 மனுவின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) ஆகையால், மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு நிபந்தனை செலவுத் தொகையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>10) இறுதியாக</u>

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு (Subject to Proof and Relevancy) ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 02.04.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 02.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 17:51:18 +0530

செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.03.25 17:51:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

– இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.03.25 17:51:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.08/2026
in
E.P.03/2016
in
O.S.No.477/2013
உத்தரவு (Draft / Fair)
நாள் : 25.03.2026